சுருக்கம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 116 குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர்த் திட்டம் – அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது நிர்வாக ஒப்புதல் வழங்கப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குஎ3) துறை

அரசாணை (நிலை) எண். 210 நாள் 3.11.2009

படிக்கப்பட்டது

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கடித எண்.மே.110/116 குடிநீர் தரம் பாதித்த குடியிருப்புகள் /உபொ2/திமேபி/ நாள் 22.10.2009

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தஞ்சாவூர் மாவட்டத்தில், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 52 குடியிருப்புகளும், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 64 குடியிருப்புகளும், ஆக மொத்தம் குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 116 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் வழங்கக் கோரும் செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்படும் பகுதியின் அடிப்படை ஆண்டு, இடைக்காலம் மற்றும் உச்ச கால மக்கள் தொகை மற்றும் குடிநீர் தேவை பின்வருமாறு :

| விவரம் | அடிப்படை ஆண்டு (2010) | இடைக் காலம் (2025) | உச்சகாலம் (2040) |
|---|---|---|---|
| குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 116 குடியிருப்புகளின் மொத்த மக்கள் தொகை | 68,902 | 75,702 | 82,683 |
| நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் என்வும், 10 விழுக்காடு நீர் இழப்புடன் மொத்த குடிநீர் தேவை | நாளொன்றுக்கு 3.04 மில்லியன் லிட்டர் | நாளொன்றுக்கு 3.35 மில்லியன் லிட்டர் | நாளொன்றுக்கு 3.64 மில்லியன் லிட்டர் |

இத்திட்டத்தின் குடிநீர்த் தேவையை கொள்ளிடம் ஆற்றில் அப்பாநல்லூர் குடியிருப்பின் அருகே 4 எண்ணம் நீருறிஞ்சுக் கிணறுகள் அமைத்து குடிநீர் வழங்கும் வகையில் இக் கூட்டுக் குடிநீர் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

3. அதிகாரம் அளிக்கப் பெற்ற குழு 08.10.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வாரியப் பரிந்துரையை ஏற்று அதன் தீர்மானம் எண். 5, நாள் 08.10.2009 ல், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 116 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அமைப்புச் செலவு ரூ.1700.00 இலட்சம் எனவும், ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.30.30 இலட்சம் எனவும், தனி நபர் செலவு ரூ.2467/- எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.16.05 எனவும் தேசிய ஊரகக் குடிநீர் திட்ட மான்யம் (NRDWP) மற்றும் தமிழக அரசின் குறைந்த பட்ச தேவைத் திட்ட மான்யம் (MNP) மூலம் நிதி உதவி பெற்று கீழ்க்கண்ட நிதி பகுப்பின்படி செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்க, தீர்மானித்தது.

| நிதி | நிதி பகுப்பு (ரூபாய் இலட்சங்களில்) | | |
|---|---|---|---|
| | மத்திய அரசு மான்யம் (50%) | மாநில அரசு மான்யம் (50%) | மொத்தம் |
| தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் (NRDWP) (அடிப்படை மதிப்பீட்டுத் தொகையில்) | 750.33 | 750.33 | 1510.00 |
| குறைந்த பட்ச தேவைத் திட்டம் (MNP) (நூற்று வீதக் கட்டணம் மற்றும் இதர செலவினங்கள்) | -- | 103.34 | 103.34 |
| மொத்தம் | 750.33 | 941.67 | 1700.00 |

இதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கருத்துருவை ஏற்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 116 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அமைப்புச் செலவு ரூ.1700.00 இலட்சம் எனவும், ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.30.30 இலட்சம் எனவும், தனி நபர் செலவு ரூ.2467/- எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.16.65 எனவும் தேசிய ஊரகக் குடிநீர் திட்ட மான்யம் மூலம் நிதி உதவி பெற்று மற்றும் தமிழக அரசின் குறைந்த பட்ச தேவைத் திட்ட மான்யம் நிதி பகுப்பின்படி செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு கீழ்க்கண்ட நிதி பகுப்பின்படி ஆணையிடுகிறது.

| நிதி | நிதி பகுப்பு (ரூபாய் இலட்சங்களில்) | | |
|---|---|---|---|
| | மத்திய அரசு மான்யம் (50%) | மாநில அரசு மான்யம் (50%) | மொத்தம் |
| தேசிய ஊரக குடிநீர் திட்டம் (NRDWP) (அடிப்படை மதிப்பீட்டுத் தொகையில்) | 758.33 | 758.33 | 1516.66 |
| குறைந்தபட்ச தேவைத் திட்டம் (MNP) (நூற்று வீதக் கட்டணம் மற்றும் இதர செலவினங்கள்) | -- | 183.34 | 183.34 |
| மொத்தம் | 758.33 | 941.67 | 1700.00 |

மேலும் குடிநீரில் உள்ள இரும்புச் சத்தின் அளவை குறைப்பதற்கு உரிய வகையில் கட்டுப்படுத்த புதிய தொழில்நுட்பங்கள் தற்போது நடைமுறையில் உள்ளதா எனவும், எதிர்காலத்தில் இதுபோன்ற திட்டங்களை வடிவமைப்பதற்கு முன்னர், இத்தொழில்நுட்ப முறைகளை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டும் எனவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை 5
ஊரக வளர்ச்சி ஆணையர், பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை, சென்னை–15
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்.
சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் (ஊரக வளர்ச்சி ஆணையர் மூலமாக)
நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனி செயலர், சென்னை 9
பொது (நூலகம்) துறை, சென்னை 9
நிதி(ந.நி (ம) கு.வ) துறை, சென்னை.9
நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் [குவ2/குவ3/குவ.1/ [illegible]] துறை
சென்னை.9
இகோ/உநகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.